www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

QM **காலாண்டுத் தேர்வு - 2024**

**8** - ஆம் வகுப்பு **தமிழ்**

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

## பகுதி - I

**I சரியான விடைத் தேர்ந்தெடுத்து எழுதுக :-** 10 X 1 = 10

1. மக்கள் வாழும் நிலப்பகுதியைக் குறிக்கும் சொல் .......... .
   அ) வைப்பு ஆ) கடல் இ) பரவை ஈ) ஆழி
2. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் .........யும் ஓட்டிவிடும்.
   அ) பாலனை ஆ) காலனை இ) ஆற்றலை ஈ) நலத்தை
3. பயனில்லா கலர் நிலத்திற்கு ஒப்பானவர்கள் ........ .
   அ) வலிமையற்றவர் ஆ) கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்
4. கற்றவருக்கு அழகு தருவது ........... .
   அ) தங்கம் ஆ) வெள்ளி இ) வைரம் ஈ) கல்வி
5. பெயர்ச்சொல்லில் பொருளை வேறுபடுத்துவது ........... ஆகும்.
   அ) எழுவாய் ஆ) செயல்படுபொருள் இ) பயனிலை ஈ) வேற்றுமை
6. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று .......... .
   அ) படித்தான் ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது
7. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப்பணியில் ஈடுபட்டவர் ......... . அ) பாரதிதாசன்
   ஆ) தந்தை பெரியார் இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்
8. 'இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........... .
   அ) இன் + ஓசை ஆ) இனி + ஓசை இ) இனிமை + ஓசை ஈ) இன் + னோசை
9. தொடக்ககாலத்தில் மனிதர்கள் மருத்துவத்திற்கு .................. பயன்படுத்தினர்.
   அ) தாவரங்கள் ஆ) விலங்குகளை இ) உலோகங்களை ஈ) மருந்துகளை
10. இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் .......... .
    அ) அ, ஆ ஆ) உ, ஊ இ) எ, ஏ ஈ) இ, ஈ

**II கோடிட்ட இடங்களை நிரப்புக :-** 5 X 1 = 5

11. எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ............ .
12. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ............ .
13. புற உலக ஆராய்ச்சிக்கு .......... கொழுகொம்பு போன்றது.
14. எட்டாம் வேற்றுமை ........... வேற்றுமை என்று அழைக்கப்படுகிறது.
15. கல்வி பயிற்சிக்குரிய பருவம் ........... .

**III பொருத்துக :-** 5 X 1 = 5

16. நடந்து - முற்றெச்சம்
17. பேசிய - வினைமுற்று
18. எடுத்தனன் உண்டான் - வேர்ச்சொல்
19. நட - பெயரெச்சம்
20. பேசினான் - வினையெச்சம்

தி. விஜயகுமார்.,
தமிழ் - பட்டதாரி ஆசிரியர்,
தி. மலை.
9789355254.

## பகுதி - II

**IV அடிபிறழாமல் எழுதுக :-** 4 + 2 = 6

21. அ) 'வாழ்க நிரந்தரம்' - எனத்தொடங்கும் தமிழ்மொழி வாழ்த்துப்பாடல். ***(அல்லது)***
    ஆ) 'உடலில் உறுதி' - எனத்தொடங்கும் வருமுன் காப்போம் பாடல்.
22. 'விலங்கொடு' - எனத்தொடங்கும் திறக்குறளை எழுதுக.

## பகுதி - III

**V எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க :-** 5 X 2 = 10

23. உலகம் எவற்றால் ஆனது?
24. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாக வாணிதாசன் குறிப்பிடுகிறார்?
25. யாருக்கு அழகு செய்ய வேறு அணிகலன்கள் தேவையில்லை?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

26. ஓலைச்சுவடிகளில் நேர்கோடுகள், புள்ளிகள் ஆகியவற்றைப் பயன்படுத்த இயலாமைக்குக் காரணம் என்ன?
27. விலை கொடுத்து வாங்க இயலாதவை என்று சியாட்டல் எதனைக் குறிப்பிடுகிறார்?
28. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?
29. தாய்நாடு என்னும் பெயர் எவ்வாறு பிறக்கிறது?

**VI எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க :-** 5 X 2 = 10

30. மெய் எழுத்துகள் எவற்றை இடமாகக் கொண்டு பிறக்கின்றன?
31. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்.
32. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?
33. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
34. ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சி பிறப்பு பற்றி எழுதுக.
35. எழுவாய் வேற்றுமையை விளக்குக.
36. உடனிகழ்ச்சிப்பொருள் என்றால் என்ன?

**VII எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க :-** 6 X 3 = 18

37. நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?
38. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.
39. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறுவன யாவை?
40. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?
41. புத்தியைத்தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
42. தமிழ்வழிக்கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றை எழுதுக.
43. பள்ளிக்குழந்தைகளுக்கு மருத்துவர் கூறும் அறிவுரைகள் யாவை?
44. கீழ்க்காணும் சொற்களைப் பெயரெச்சம், வினையெச்சம் என வகைப்படுத்துக.
நல்ல, பாய்ந்து, வீழ்ந்த, அழைத்த, பிடித்து, பார்த்து.

**VIII எவையேனும் ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க :-** 6 X 2 = 12

45. **சரியான மரபுச்சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
அ) மயில் ............(கூவும்/அகவும்) ஆ) பால் .............. (பருகு/குடி)
46. **பன்மை விகுதியைச் சேர்த்து எழுதுக.** பூ, கை (கள்/க்கள்)
47. காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. **(வினாத்தொடராக மாற்றுக)**
48. **உவமைத்தொடரை பயன்படுத்தித் தொடர் அமைக்க.**
பசுமரத்தாணி போல.
49. **தமிழ் எண்களை எழுதுக.**
அ) உலக இயற்கை நாள் அக்டோபர் 3.
ஆ) உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 6.
50. **கலைச்சொல் எழுதுக.** Disease Talent
51. **பின்வரும் தொடர்களில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இட்டு எழுதுக.**
அ) திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்புகளைக்கொண்டது.
ஆ) கபிலன் தன் தந்தையிடம் இன்று மாலை விளையாடப் போகட்டுமா என்று கேட்டான்.

## பகுதி - IV

**IX அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க :-** 3 X 8 = 24

52. அ) எழுத்துகளின் தோற்றம் குறித்து எழுதுக. ***(அல்லது)***
ஆ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
53. அ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' - கதையைச் சுருக்கி எழுதுக. ***(அல்லது)***
ஆ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.
54. அ) விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக்கடிதம் எழுதுக.
***(அல்லது)*** ஆ) 'நூலகம்' - கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.
முன்னுரை - நூலகத்தின் தேவை - வகைகள் - நூலகத்திலுள்ளவை - படிக்கும் முறை - முடிவுரை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com